அறிவியல் என்பது மனிதன் தன் கற்பனையை அறிவைப் பயன்படுத்தித் தனக்கு தேவையான பணிகளிலும், பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்திற்கும் ஏற்றவாறு தன் வாழ்வினை மாற்றி அமைக்கத் தேவைப்படும் ஓர் முடிவற்ற துறையாகும். தற்போது இதன் உச்ச நிலையில் புரட்சிகரமான வளர்ச்சியில் இருப்பது "நேனோ (NANO) டெக்னாலஜி" ஆகும்.

**நேனோ டெக்னாலஜி என்றால் என்ன?**

முனித தலைமுடியில் 1,00,000ல் [ஒரு பில்லியனில்] ஒரு பங்கே இருக்கும் துகள்களை இயக்கியும் கட்டுப் படுத்தியும் உபயோகமான பல பொருள்களை, நுண்ணிய கருவிகளை உருவாக்குவது தான் நேனோ தொழில் நுட்பம்.

**ஏன் இவை புரட்சிகரமானவை?**

நேனோ அளவிலான மூலக்கூறுகளைக் கட்டுப் படுத்துவதன் மூலம் மரம் முதல் உணவு வரை நாம் விரும்பிய வகையில் எதையும் உருவாக்க முடியும்.

**நேனோ தொழில் நுட்பத்தின் பயன்கள் என்னென்ன?**

கறை படியாத ஆடைகளிலிருந்து, திறன் வாய்ந்த விண்கலம் வரை இதன் மூலம் உருவாக்கலாம். மிகச் சிறிய கருவிகள், சிறந்த மருந்துகள் போன்றவையும் உருவாக்கலாம்.

**ஆடை தயாரிப்பில் நேனோ தொழில் நுட்பம் :**

ஒரு துணியில் ஒரு டம்ளர் தண்ணீர், பிறகு ஒரு டம்ளர் எண்ணெய், ஒரு டம்ளர் ஜூஸ் ஒவ்வொன்றாக ஊற்றினால், ஒரு சொட்டு ஈரம் இல்லை. எண்ணெய் கறை மற்றும் சுருக்கம் எதுவும் இல்லை. அந்தத் துணியில் உள்ள பருத்தி இழைகள் மீது நேனோ அளவே உள்ள சிறிய சின்தெடிக் [செயற்கை] கொக்கிகள் பொருத்தப் பட்டிருப்பதால் அவற்றில் நீர், எண்ணெய், ஜூஸ் எதுவுமே ஒட்டுவதில்லை. ஆனாலும் துணியின் இயல்பான தன்மை துளியும் மாறுபடுவதில்லை. இதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சூடு தாங்கும் உடைகள், குளிரைத் தாங்கும் உடைகள் என பல ரக உடைகளை நெய்ய முடியும்.

துணி வகைகள் மட்டுமல்ல, புதிய முறை மின் உற்பத்தி நிலையங்களையும், கம்ப்யூட்டருக்குப் புதிய முறையில் மின்சக்தி தருவது, புதிய வடிவில் கம்ப்யூட்டர்களை உருவாக்குவது, உயிரி மருத்துவக் கருவிகளைத் தயாரிப்பது என்ற பல துறைகளில் நேனோ தொழில் நுட்பம் உதவுகிறது.

**புதிய மின் உற்பத்தியில் நேனோ டெக்னாலஜி :**

மிக நுண்ணிய கார்பன் நேனோ டியூப்களின் வழியே தண்ணீரைச் செலுத்தினால் மின்சாரம் உற்பத்தியாகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கார்பன் குழாய்களின் குறுக்களவு மில்லியனின் ஒரு பங்குதான்.

**மருத்துவத் துறையில் நேனோ டெக்னாலஜி :**

"நேனோ டியூப் பேஸ்மேக்கர்" கருவியை இதயத்தின் இரத்தக் குழாய் ஒன்றில் பொருத்தினால் போதும். அவற்றை உரசிச் செல்லும் ரத்த ஓட்டத்தின் மூலமே பேஸ்மேக்கருக்குத் தேவையான மின்சாரம் கிடைத்து விடும்.

"பெரும்பாலான மருந்துகளுக்குத் தானாக வேலை செய்யும் திறன் இருக்காது. மருந்துகள் உரிய பாகத்திற்குப் போவதற்கு முன் உடலில் சுரக்கும் பல்வேறு என்சைம் திரவங்கள் அவற்றைச் சிதைத்து விடும்". அதனால் உடலின் நோய்வாய்ப்பட்ட பாகத்திற்குச் சென்று சேரும் வரை மருந்துக்கு ஒரு பாதுகாப்புக் கவசம் தேவை. அந்தக் கவசம் அலர்ஜி ஏற்படுத்தாததாக, வேலை முடிந்ததும் அழிந்து போகக் கூடியதாக இருக்க வேண்டும். ரத்தக் குழாய்களுக்குள் செல்லும் அளவுக்கு அவை சிறியதாக இருப்பதும் அவசியம். குறிப்பிட்ட கட்டிகளைக் குறி வைத்துச் செல்லக்கூடிய கொழுப்பால் ஆன நேனோ நுண் துகள்களை உருவாக்கி அந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணப்படுகிறது.

டி.என்.ஏ.வின் "நல்ல" துணுக்குகளை நேரடியாகவோ, வைரஸ் கோட்டிங் மூலமோ தசைகளுக்குள் அனுப்பி பாதிக்கப்பட்ட ஜீன்களைக் குணப்படுத்த முடியும்.

புனேயில் உள்ள "தேசிய வேதியல் ஆய்வகம்" அத்தி மரத்தின் மீது வாழும் ஒரு நுண் உயிரியைத் தங்க அயனிகள் நிறைந்த திரவத்தில் மூழ்க வைத்து அதன் உடலுக்குள் படியும் அடர்த்தியான தங்க நுண்துகள்கள் மூலம் நோய்களைக் கண்டு பிடிக்கும் முறை ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நேனோ டெக்னாலஜி மூலம் மனித எலும்பிற்கு மாற்றாக செயற்கை எலும்பு உருவாக்கப்படுகிறது. சில உயிரியல் பொருள்கள், கண்ணாடி, செராமிக்ஸ் போன்றவற்றை நேனோ அளவில் கலந்தால் செயற்கை எலும்பு ரெடி. செயற்கை எலும்புகள் ஒரிஜினல் மனித எலும்பை விடப் பல மடங்கு உறுதியானவை.

**பிற துறைகளில் நேனோ டெக்னாலஜி :**

"நேனோ டெக்னாலஜீஸ்" என்ற ஜெர்மானிய கம்பெனி நேனோ பூச்சு பெயின்ட் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இது சாதாரண கண்களுக்குத் தெரியாது. ஆனால் இந்த பெயிண்ட் பூசப்பட்ட பரப்பில் கறையோ, கீறலோ விழாது. அந்தப் பரப்பை சுத்தம் செய்வதும் எளிது.

**நேனோ தொழில் நுட்ப வளர்ச்சியில் உலக நாடுகள் :**

நேனோ தொழில் நுட்பம் எவ்வளவு அருமையானது என்பதை உலகம் உணர்ந்திருக்கிறது. அமெரிக்க அரசு 2000ல் நேனோ தொழில் நுட்பத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தது. ஐரோப்பிய நாடுகள் கிட்டத்தட்ட இதை விட இருமடங்கு செலவிடுகிறது. ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளும் இந்தப் போட்டியில் இறங்குகின்றன.

**இந்தியாவில் நேனோ தொழில் நுட்பம் :**

ஜவஹர்லால் நேரு சென்டர் ஃபார் அட்வான்ஸ்ட் சயின்டிஃபிக் ரிசர்ச் நிறுவனத்தின் முக்கிய விஞ்ஞானியான சி.என்.ஆர்.ராவின் தலைமையில் வருடத்திற்கு ரூ. 15–20 கோடி வரை செலவாகும் புதிய நேனோ தொழில் நுட்ப ஆராய்ச்சி ஒன்றிற்கு 10வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு [டி.ஆர்.டி.ஓ.] அமைப்பும் ரூ. 75 கோடி மதிப்பிலான திட்டத்தை "நேஷனல் புரோகிராம் ஃபார் ஸ்மார்ட் மெட்டீரியல்ஸ்" என்ற பெயரில் துவங்கியிருக்கிறது. இந்த "ஸ்மார்ட்" மெட்டீரியல்கள், சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களை உள்வாங்கி அதற்கு ஏற்றபடி செயல்படக் கூடியவை. உதாரணமாக எதிரி ரேடாருக்கு டிமிக்கி கொடுக்கும் போர் விமானம். உடலின் இன்சுலின் அளவை அறிந்து தேவையான இன்சுலினை பம்ப் செய்யும் இன்சுலின் பம்ப் போன்றவற்றுக்குத் தேவையான பொருள்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறார்கள்.

அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கிலுள்ள இந்தியர்களும் இந்தியாவில் உள்ள விஞ்ஞானிகளும் சேர்ந்து சமீபத்தில் "நேனோ இந்தியா" என்ற அமைப்பை புனேயில் துவக்கியிருக்கிறார்கள்.

**முடிவுரை :**

மற்ற எல்லா புது தொழில் நுட்பங்களைப் போலவே நேனோடெக்கும் சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் ஆபத்துக்கள் பற்றிய கேள்விகளை கிளப்பியிருக்கிறது. காற்றில் மிதக்கும் மாசுக்களின் அளவே இருக்கும் நேனோ கருவிகளை தற்செயலாக யாராவது சுவாசித்து விட்டால் என்ன ஆகும்? ✦✦✦

# தெரிந்து கொள்ளுங்கள்

— கே. ஜெயகுமார், பி.ஏ., மூன்றாமாண்டு

★ இந்தியாவில் முதன் முதலில் வெளியான அரசியல் பத்திரிக்கை – "இந்தியன் ஹெரால்டு".

★ இந்தியாவில் பத்திரிக்கை நடத்திய முதன் பெண்மணி – ரவீந்திரநாத் தாகூரின் தமக்கை – "சுவர்ணகுமாரி தேவி".

★ இந்தியாவில் பெண்களுக்காக முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிக்கை – "இந்தியன் லேடீஸ்".

★ டைம் ஆங்கில பத்திரிக்கையின் அட்டையில் இடம் பெற்ற முதல் நடிகர் – "ஜார்லி சாப்ளின்".

★ இந்தியாவின் முதல் மாத இதழ் – "டெல்லி ஸ்கெட்ச்".

★ தமிழில் வெளிவந்த முதல் நாவல் – "பிரதாப முதலியார் சரித்திரம்".

★ இந்தியாவில் குழந்தைகளுக்கான முதல் பத்திரிக்கை 1604ல் தமிழில் வெளிவந்த "பாலதீபிகை".

★ தமிழ்நாட்டில் முதல் தினசரி "சுதேச மித்திரன்" 1882ம் ஆண்டு வெளிவந்தது.

★ இந்தியாவின் முதல் வார இதழ் "தேசாபகாரி" 1861ல் வெளிவந்தது.

★ இந்தியாவின் முதல் பெண் செய்தி தொடர்பாளர் "சுஸ்மா சுவராஜ்".

✦✦✦

# VOWELS இல்லாத வார்த்தைகள்

- T. Mareswaran, II B.Com., (C.A.)

A, B, C, D .... 26 எழுத்துக்களில் **VOWELS** (A,E,I,O,U) இல்லாத வார்த்தைகள் :

★ SKY - வானம்
★ DRY - ஈரமில்லாத
★ FLY - துணி மூடி
★ GYM - உடற்பயிற்சி கூடம்
★ PYX - நாணயங்களின் எடைதரம் சோதனை செய்
★ SHY - எறிதல்
★ SPRY - சுறுசுறுப்பு
★ WRY - முகத்தை சுளித்துக் கொள்
★ GYPSY - See Gypsy
★ WHY - ஏன்
★ SPY - ஒற்றன்

✦✦✦

# ஆகஸ்ட் 15ன் அற்புதம்

- K. Magudamudi, II B.Sc., (Maths)

- 1769ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி நெப்போலியன் பிறந்தார்.
- 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி பனமா கால்வாய் மக்கள் உபயோகத்திற்காகத் திறக்கப் பட்டது.
- 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்தது.
- 1948ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி தென்கொரியா சுதந்திரம் அடைந்தது.
- 1948ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியாவின் முதல் நினைவு தபால்தலை காந்தியின் உருவம் பொறிக்கப்பட்டு வெளியானது.
- 1959ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி ரஷ்யா சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பியது.
- 1960ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி காங்கோ நாடு சுதந்திரம் அடைந்தது.
- 1971ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி பக்ரெய்ன் நாடு சுதந்திரம் அடைந்தது.
- 1972ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியாவில் அஞ்சல் குறியீட்டு எண் முறை அறிமுகம் செய்யப் பட்டது.
- 1975ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி சென்னைத் தொலைகாட்சி நிலையம் முதன் முதலாக செயல்படத் தொடங்கியது.
- 1997ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியாவின் சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு முக்கிய நகரங்களில் ஒரே நேரத்தில் ரூபாய் ஐம்பத்திற்கான நாணயம் வெளியிடப்பட்டது.

# கிடையாதய்யா... கிடையாது !

- நட்சத்திர மீனுக்கு மூளை கிடையாது.
- நண்டுக்குத் தலை கிடையாது.
- ஆமைக்குப் பற்கள் கிடையாது.
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் கிடையாது.
- மீனிற்கு கண் இமை கிடையாது.
- மண்ணுளி பாம்பிற்குக் கண் கிடையாது.
- பூச்சிகளுக்குத் தொண்டை கிடையாது.
- பாம்பிற்குக் காது கிடையாது.

# இந்தியாவில் கிடைக்கும் தாதுக்கள்

| | | |
|---|---|---|
| அலுமினியம் | – | கேரளா |
| இரும்புத்தாது | – | தமிழ்நாடு, பீகார், ஒரிசா |
| சலவைக்கல் | – | ஜெய்ப்பூர் |
| செம்பு | – | மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் |
| தங்கம் | – | கோலார் |
| நிலக்கரி | – | தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம் ஆந்திரா, மேற்கு வங்காளம் |
| பாக்ஸைட் | – | மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம் |
| மாங்கனீஸ் | – | மத்தியப்பிரதேசம், ஒரிசா, கர்நாடகா, பீகார். |

# டெசிபல்

ஒலியை அளக்க உதவும் கருவி டெசிபல் ஆகும். ஒலியின் வேகம் வினாடிக்கு 333.5 மைல். காற்றை விட நீரில் அதிகமாக இருக்கும்.

- நாம் மூச்சு விடும் போது ஏற்படும் சத்தம் 10 டெசிபல்.
- ஒரு மரத்தின் கிளைகள் அசையும் போது எழும் சத்தம் 20 டெசிபல்.
- போக்குவரத்தால் ஏற்படும் சத்தம் 70 டெசிபல்.
- அதிக டிராபிக்கால் ஏற்படும் சத்தம் 90 டெசிபல்.
- இடி இடிப்பதால் ஏற்படும் சத்தம் 110 டெசிபல்.
- விமானம் கிளம்பும் போது எழும் சத்தம் 120 டெசிபல்.
- ராக்கெட் கிளம்பும் போது எழும் சத்தம் 170 டெசிபல்.

+++

# பொருளியல் தந்தை

- K. Ganesan, III B.Com.,

- பொருளியல் தந்தை – ஆடம் ஸ்மித் [ஸ்காட்லாந்து]
- நன்னியல் பொருளியல் தந்தை – மார்ஷல் [கிளப்ஹாம்]
- பேரியியல் பொருளியல் தந்தை – ஜே.எம். கீன்ஸ் [கேம்பிரிட்ஜ்]
- சமதர்மத்தின் தந்தை – கார்ல் மார்க்ஸ் [ஜெர்மனி]
- கற்பனை சமதர்மத்தின் தந்தை – செயின்ட் சைமன் [பிரான்சு]
- கூட்டுறவு இயக்கத்தின் தந்தை – ராபர்ட் ஓவன் [இங்கிலாந்து]

– நன்றி – தினத்தந்தி நாளிதழ்

# இருபதாம் நூற்றாண்டு ஒரு பார்வை

- K. Ganesan, III B.Com.,

* 1903 – "ரைட் சகோதரர்கள்" விமானம் கண்டு பிடித்து முதன் முறையாக பயணம் செய்தல்.
* 1914 – முதல் உலகப்போர் தொடக்கம்.
* 1918 – முதல் உலகப்போர் முடிவு.
* 1933 – ஜெர்மனியின் தலைவரானார் "ஹிட்லர்".
* 1939 – இரண்டாம் உலகப்போர் தொடக்கம்.
* 1945 – ஜப்பானின் "ஹிரோஷிமா, நாகசாகி" நகரங்களில் அணுகுண்டு தாக்குதல்.
* 1947 – இந்தியா சுதந்திரம் அடைதல்.
* 1948 – காந்திஜி சுட்டுக்கொலை.
* 1949 – நேட்டோ ஒப்பந்தம்.
* 1950 – இந்தியா குடியரசானது.
* 1963 – அமெரிக்க அதிபர் "ஜான்கென்னடி" சுட்டுக் கொலை.
* 1964 – "ஜவஹர்லால் நேரு" மரணம்.
* 1965 – "இந்தியா – பாகிஸ்தான்" போர்.
* 1966 – பிரதமர் "லால் பகதூர் சாஸ்திரி" மரணம்.
* 1968 – "மார்டின் லூதர்கிங்" கொலை செய்யப் பட்டார்.
* 1969 – அமெரிக்காவை சேர்ந்த "நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின்" ஆகியோர் முதல் முதலாக சந்திரனில் காலடி வைத்தனர்.
* 1973 – "தந்தை பெரியார்" மறைவு.
* 1974 – இந்தியாவில் முதன் முறையாக இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பொக்ரானில் "அணுகுண்டு சோதனை".
* 1978 – உலகின் முதல் சோதனைக்குழாய் குழந்தை [லூயிஸ் ஜான் பிரௌன்] பிறப்பு.
* 1984 – "இந்திரா காந்தி" கொலை செய்யப்பட்டார்.
* 1988 – எல்லைக் காந்தி என அழைக்கப்பட்ட "கான் அப்துல் கபார்கான்" மரணம்.
* 1991 – முன்னாள் பிரதமர் "ராஜீவ் காந்தி" மனித வெடி குண்டால் படுகொலை செய்யப்பட்டார்.
* 1994 – "டாக்டர் நெல்சன் மண்டேலா" தென்னாப்பிரிக்காவின் குடியரசு தலைவரானார்.
* 1996 – "அடல் பிகாரி வாஜ்பாய்" பிரதமராக பதவி ஏற்பு.
* 1997 – வேல்ஸ் "இளவரசி டயானா" மரணம்.
* 1998 – இந்தியா "அணுகுண்டு சோதனை" நடத்தியது. "அமர்த்தியா சென்" பொருளாதாரத் திற்கான நோபல் பரிசு பெற்றார்.

❖❖❖

# செய்தித் துளிகள்

* உலகில் 9 ஆயிரத்து 500 மொழிகள் பேசப் படுகின்றன.
* உலகில் முதன் முதலில் தேர்தல் நடத்திய நாடு கிரேக்கம்.
* சிங்கப்பூரில் இரவு நேரங்களில் செயல்படும் நீதி மன்றங்கள் உள்ளன.
* அரசின் உயர்ந்த அதிகாரப் பதவிகளில் பெரும்பாலும் பெண்கள் உள்ள முதல் நாடு நியூசிலாந்து.
* இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற ஒரே பெண்மணி மேடம் கியூரி ஆவார்.
* ஓட்டப்பந்தய வீராங்கனை தங்க மங்கை பி.டி. உஷாவின் முழுப்பெயர் பில்லூவலகண்டி டிக்கா பரம்பில் உஷா.
* அன்னம் நூறாண்டு வரை வாழும்.
* சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் ஆகும்.
* ஒரு தலைமுறை என்பது 33 வருடம்.
* கருவில் கண்கள் தான் முதலில் தோன்றும்.
* பிரசுலின் டி.சி.ஆர்ச்சிட் என்ற பூ மனிதர்களின் முகம் போலவே காட்சியளிக்கும்.
* ரீசன் டோலியோ கார்டன் என்ற மலர் மண்ணுக்குள்ளே மணம் வீசும். இவ்வகை மலர் ஆஸ்திரேலியா நாடுகளில் காணப்படும்.

– நன்றி – தினத்தந்தி இளைஞர் மலர்.

❖❖❖

# POEM - 1

- X. Antony Viyagappan, I B.A.,

New year comes once in a year.
Pongal comes once in a year.
Deepavali comes once in a year.
Chritumas comes once in a year.
Ramsyan comes once in a year.
Now I don't know why this troublesome exams come
Twice in a year.

❖❖❖

# ஞாபகம் வருதே ...

- T. பாஸ்கரன், III B.A.,

✵ ஆரம்பப் பள்ளியில்
நெஞ்சைத் தட்டித் தட்டிப்
படித்த ஆங்கிலப் பாடம் ...

✵ தொட்டுப் பிடித்து
விளையாடி
தொலைந்து போன
தங்க நாட்கள் ...

✵ குளத்தில் குதித்து
நீச்சல் தெரியாமல்
தத்தளித்த
கோடை நாட்கள் ...

✵ ஆழம் பார்க்காமல்
அழி சகதிக்குள்
கால் விட்டு
கதறிய நாட்கள் ...

✵ மனப்பாடம் செய்யாததால்
மண்டியிட்ட
மதன நாட்கள் ...

✵ பள்ளியை விட்டு
பிரியும் போது
பதற்றமில்லாமல்
பிரிந்த நாட்கள் ...

✦✦✦

# POEM - 2

- X. Antony Viyagappan, I B.A.,

If ...
The sun is of no use
If it does not shine.
A pen is of no use
If it does not write.
A mind is of no use
If it does not work.
A kite is of no use
If it does not fly.
A life is of no use
If it is not well lived.
Friendship is of no use
If there is no sacrifice.
And love is of no use
If is is not shared.

✦✦✦

# நெப்போலியன் – ஹிட்லர் கால இடைவெளி

- K. கணேசன், III B.Com.,

✵ நெப்போலின் பிறப்பு – கி.பி. 1760
ஹிட்லர் பிறப்பு – கி.பி. 1889
வித்தியாசம் – 129 ஆண்டுகள்

✵ நெப்போலியன் ஆட்சிக்கு வந்தது – கி.பி. 1804
ஹிட்லர் ஆட்சிக்கு வந்தது– கி.பி. 1933
வித்தியாசம் – 129 ஆண்டுகள்

✵ நெப்போலியன் வியன்னாவை கைப்பற்றியது - கி.பி.1809.
ஹிட்லர் வியன்னாவை கைப்பற்றியது – கி.பி. 1935
வித்தியாசம் – 129 ஆண்டுகள்

✵ ரஷ்யா மீது நெப்போலியன் படையெடுப்பு – கி.பி. 1812
ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுப்பு – கி.பி. 1938
வித்தியாசம் – 129 ஆண்டுகள்

✵ நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டது – கி.பி. 1816
ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டது – கி.பி. 1945
வித்தியாசம் – 129 ஆண்டுகள்

– நன்றி – தினத்தந்தி தங்கமலர்.

✦✦✦

# ஒரு நிமிடத்தில் உலகில் நடப்பது என்ன?

- P. Ramasubharao, II B.Sc., (Physics)

✵ 34 – திருமணம் நடக்கிறது.

✵ 3 – மணமக்கள் விவாகரத்து செய்து கொள்கின்றனர்.

✵ 100 – மனிதர்கள் மரணமடைகின்றனர்.

✵ 114 – குழந்தைகள் பிறக்கின்றன.

✵ 38 – புயல் உருவாகிறது.

✵ 68 – கார்கள் உற்பத்தியாகிறது.

✵ 850 – மைல் தூரம் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது.

✵ 14000 – கன அடி மழை பெய்கிறது.

✵ 14000 – டன் உணவுப் பொருட்கள் உண்ணப் படுகின்றன.

✵ 35000 – டன் தண்ணீர் கடலில் கலக்கிறது.

✵ 280000 – டெலிபோன் மணிகள் ஒலிக்கிறது.

✵ 600000 – சிகரெட்கள் புகைக்கப்படுகின்றன.

✵ 638000 – காலன் மது அருந்தப்படுகிறது.

✦✦✦

# SOME INTERNET ADDRESSES

- KARTHICK. Ar. II B.Com., (Comp. APP)

*Search Engines :*

www.google.com
www.metacrawler.com
www.2look4.com
www.altavista.com
www.av.com
www.hotbot.com
www.khoj.com
www.ixquick.com

*Tamilnadu :*

www.tn.gov.in/
www.tnpsc.org/
www.goidirector.nic.in/
www.southernrailway.org/
www.upsc.gov.in/
www.chennaitelephones.gov.in
www.chennaicustoms.org/

*Tamil e-papers :*

www.thinnai.com
www.ambalam.com
www.pathivugal.com
www.muzhakkam.com
www.araamthinai.com
www.kaanal.com
www.nilacharal.com

*Education :*

www.schoolssinkerala.com
www.icfai.org
www.ignou.edu
www.netvarsity.com
www.onlinevarsity.com
www.piewebtutor.com
www.classontheweb.com
www.egurucool.com
www.classteacher.com
www.education.eth.net
www.minicat.com
www.primetutor.com
www.doityourself.com
www.brainvisa.com
www.freedu.com
www.learnengling.org.uk
www.joincollege.corn
www.toefl.org
www.aftercampus.com
www.syvum.com

*Science :*

www.denniskunkel.com
www.dreamtime.com
www.space.com
www.science.com
www.natureexplorer.com

+++

## எண் விளையாட்டு

- P. Ramasubharao, II B.Sc., (Physics)

- 1x8+1 = 9
  12x8+2 = 98
  123x8+3 = 987
  1234x8+4 = 9876
  12345x8+5 = 98765
  123456x8+6 = 987654
  1234567x8+7 = 9876543
  12345678x8+8 = 98765432
  123456789x8+9 = 987654321

- 0x9+1 = 1
  1x9+2 = 11
  12x9+3 = 111
  123x9+4 = 1111
  1234x9+5 = 11111
  12345x9+6 = 111111
  123456x9+7 = 1111111
  1234567x9+8 = 11111111
  12345678x9+9 = 111111111

- 37 x 3 = 111
  37 x 6 = 222
  37 x 9 = 333
  37 x 12 = 444
  37 x 15 = 555
  37 x 18 = 666
  37 x 21 = 777
  37 x 24 = 888
  37 x 27 = 999

+++

## விந்தைச் செய்திகள்

- T. Magudamudi, II B.Sc.,

- பிறந்தது முதல் இறப்பது வரை பல்லி தண்ணீர் குடிப்பதில்லை.
- உலகிலேயே நீண்ட நாள் வாழக்கூடியது முதலை. [300 ஆண்டுகள்]
- உலகிலேயே வேகமாக வளரும் தாவரம் மூங்கில்.
- தலைமுடி வருடத்திற்கு 40 செ.மீ. வரை வளரும்.
- திரை அரங்குகள் இல்லாத நாடு பூட்டான்.
- சாலமன் என்ற மீன் நீரோடும் திசையில் நீந்தும் போது பின்புறமாக நீந்தும்.
- சீனர்கள் நாயைக் கொம்பு இல்லாத ஆடு என்பார்கள்.
- சிப்பி ஒரு வருடம் ஆணாக இருக்கும். பின்னர் அடுத்த வருடம் பெண்ணாக மாறி விடும்.
- தேன் ஒன்றுதான் எப்போதுமே கெட்டுப் போகாது.
- ஒட்டகத்தின் பால் 60 நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
- சித்த வைத்தியத்தின் தாயகம் இந்தியா.
- டாக்டர்கள் அதிகம் தற்கொலை செய்யும் ஒரே நாடு அமெரிக்கா.
- கிளி ஜோசியம் முதன் முதலில் மியான்மர் [பர்மா] நாட்டில்தான் தோன்றியது.
- பலாமரம், அத்திமரம், ஆலமரம் ஆகிய மரங்கள் பூ பூக்காமலே காய் காய்க்கின்றன.

❖❖❖

## உதடு ஒட்டாத குறள்கள் மூன்று

- P. Ramasubharao, II B.Sc., (Physics)

அவை அறத்துப்பாலில் ஒன்று, பொருட்பாலில் ஒன்று மற்றும் இன்பத்துப் பாலில் ஒன்றும் அமைந்துள்ளது.

**அறத்துப்பால்**

இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தை
துறந்தார் துறந்தார் துணை.

– 310 [31 அதிகாரம் – வெகுளாமை]

**பொருட்பால்**

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

– 489 [49 அதிகாரம் – காலம் அறிதல்]

**இன்பத்துப்பால்**

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.

– 1296 [130 அதிகாரம் – நெஞ்சொடு புலத்தல்]

❖❖❖

## வரலாற்றில் ஜனவரி 26

- T. Mareswaran, II B.Com., (C.A.)

- 26-01-1530 - மொகலாய மன்னர் பாபர் மறைவு.
- 26-01-1539 - ஷெர்ஷா சூரி, ஹிமாயுனைத் தோற்கடித்தார்.
- 26-01-1554 - மொகலாய மன்னர் ஜஹாங்கீர் பிறப்பு.
- 26-01-1739 - நாதிர்ஷா.
- 26-01-1818 - அடிமைப் பெண்கள் விற்பனை இந்தியாவில் தடை செய்யப்பட்டது.
- 26-01-1861 - சென்னை, கொல்கத்தா, மும்பையில் தொலைபேசி தொடர்பு அறிமுகம்.
- 26-01-1869 - மும்பையில் உயர்நீதிமன்றம் அமைப்பு.
- 26-01-1930 - முழு சுதந்திரம் தேவை – காங்கிரஸ் கோரிக்கை.
- 26-01-1950 - இந்தியாவில் குடியரசு ஆட்சி ஏற்பட்டது.
- 26-01-1950 - சித்தரஞ்சனில் ரெயில் பெட்டி தொழிற்சாலை துவக்கம்.
- 26-01-1950 - கடைசி கவர்னர் ஜெனரல் இராஜாஜி பதவி விலகினார்.
- 26-01-1972 - இந்திராகாந்தி பாரத ரத்னா விருது பெற்றார்.

❖❖❖

## TRY IT

- P.R. Ramsingh, III B.Com.,

- The 26 letters of our alphabet can be transposed 620, 448, 401, 733, 239, 439, 369, 000 times.
- 14622047999 / by 10 leaves a remainds of 9.
  14622047999 / by 9 leaves a remainds of 8.
  14622047999 / by 8 leaves a remainds of 7, etc.
- Five w each bearing six letters would have to be arranged 620, 448, 401, 735, 259, 439, 369, 000 times in order to achieve every possible combination.

❖❖❖

# INTERESTING

- P.R. Ramsingh, III B.Com.,

- There are over 10 million people who share your birthday.
- School comes from the great word 'skhole' which means 'leisure'.
- Mosquitoes prefer to bite blandes.
- There is a waterfall near Honolulu which 'Falls' upwards.
- There are more than 200 different viruses than can cause colds.
- If a drop of whisky is squited on to its back, a scorpion will sting itself to death.
- A kiss has been medically described as, "the anatomical juxtaposition of two orficularis oris muscles in a state of contraction".
- The question mark? developed from the early practice of putting the first and last letters of work 'questio' after a sentence. As this practice increased the 'q' was written above the 'o' until finally the 'q' degenerated into '7' and the 'o' become simply(.).

❖❖❖

# WOW

- Cockroaches have remained unchanged on earth for about 250,000,000 years.
- Files take off with a backword jump.
- The Sun weights 3,30,000 times as much as the earth.
- Every minute 12 Cars are manufactured in the U.S.A.
- A butterfly can look at you through 12,000 eyes.

❖❖❖

# JOKES

- X. Antony Viyagappan, I B.A.,

Teacher : What is the cover of the tree trunk called?
Harish : I don't know sir.
Teacher : Bark Harish, Bark.
Haris : Bow.........vow....

❖❖❖

# மௌனப் பதிவுகள் ...

- T. பாஸ்கரன், III B.A.,

- இரவின் முடிவும்
  விடியலின் தொடக்கமும் ...
- குழந்தை பேசிய
  மழலை மொழிகள் ...
- மலர்கள் மலரும்
  மௌன வேளைகள் ...
- தண்ணீர்ப் பூத்தூவும்
  மழைப் பொழுதுகள் ...
- இறைவனிடம் வேண்டும்
  இன்ப வேளைகள் ...
- கண்ணின் பார்வை
  பரிமாற்றங்கள் ...
- நிலவில் காலடி வைத்த
  ஆம்ஸ்ட்ராங்கின்
  காலடித் தடங்கள் ...
- நிலவு உதிக்கும்
  நித்திய வேளைகள் ...
- பேசி விட்ட வார்த்தைகள்
  முடிந்து விட்ட காலங்கள் ...
- நான் எழுதும்
  இந்த கவிதை தொடரும் ...

❖❖❖

# FUNNY QUIZ

- X. Antony Viyagappan, I B.A.,

Question-1 : Where would 'I' be if I ran?
Answer : I ran ... Iran.

Question-2 : Which is the most polluted county in the would?
Answer : Germany (Germ-many).

Question-3 : Which city is known for its cleanliness?
Answer : Washington (Because it washes ton and tons).

Question-4 : What is the longest sentence in the world?
Answer : Life Imprisonment.

❖❖❖

# அதிசய செய்திகள்

- P. Ramasubharao, II B.Sc., (Physics)

- தாமரைக் கிழங்கிலிருந்து சுரக்கும் பால் போன்ற வெண்ணிற திரவத்தை அன்னம் விரும்பி சாப்பிடும். அதைத்தான் தண்ணீரிலிருக்கும் தாமரை தண்டின் பாலை அன்னம் அருந்துவதை நீரிலிருந்து பாலைப் பிரிப்பதாகக் கருதப்படுகிறது.
- சராசரியாக ஒரு மனிதனின் மூளை 30 பவுண்ட் எடை உடையது. 10 கோடி வகையான செய்திகளை சேமித்து வைக்கும் ஆற்றல் உடையது.
- 70 வயதான மனிதன் தன் வாழ்நாளில் 70,000 மைல்கள் நடந்திருப்பான்.
- இந்தியாவில் ஒரு ஆண்டுக்கு 1 கோடி மரங்கள் வெட்டப் படுகின்றன. இதே போல் இருந்தால் 25 ஆண்டுகளில் இந்தியாவில் மரங்களே இருக்காது.
- சமாதானத்தின் சின்னமாக விளங்கும் புறாவை உருவகித்தவர் என்றும் பெருமைக்குரியவர் ஓவியர் பாட்லேர் பிகாசோதான்.
- அமேஸான் ஆறுதான் உலகில் அதிக வேகத்தில் பாயும் ஆறு. இது ஒரு நொடிக்கு 63,50,000 கன அடிகள் வீதம் பாய்கிறது.

❖❖❖

# ஜோக்...!

மாணவன் : ஸார் ! செய்யாத ஒரு காரியத்திற்காக, ஒருத்தரைத் தண்டிக்கலாமா?

ஆசிரியர் : கூடாது..! அது தப்பு..!

மாணவன் : நான் இன்னிக்கு ஹோம்–ஒர்க் செய்துகிட்டு வரலை...சார்...!

❖❖❖

# உலகிலேயே மிகவும் இழிவானது

- G. Suresh Babu, III B.Sc., (Comp. Science)

ஒரு உலகப்பிரசித்தி பெற்ற மிகச் சிறந்த குருவிடம் சீடனாக விரும்பிய ஒரு இளைஞனைப் பற்றிய அழகான கதை ஒன்று உண்டு. அவன் அவரிடம் சென்று, "ஐயா, என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான். அவர், "குருதட்சணை வேண்டும்" என்றார். இந்தப் பையன், "ஐயா உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டதற்கு, குரு, "உலகத்தில் நீ காணக்கூடிய பொருள்களிலேயே மிக மிக இழிவான ஒரு பொருளை எனக்கு குருதட்சணையாகக் கொண்டு வா. அப்போது நான் உன்னை ஏற்றுக் கொள்வேன்" என்று சொன்னார். ஆகவே இந்தப் பையன் இழிவான பொருளைத் தேடிச் செல்கிறான். அதை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. "இது கெட்டது, அது மோசமானது, கறுப்பர்கள் மோசமானவர்கள், இல்லை இல்லை, இந்தத் தொழு நோயாளி இன்னும் மோசமானவர்". இவ்வாறாக ஒவ்வொன்றையும் ஒதுக்கிக் கொண்டே செல்கிறான்.

மூன்று வருடங்கள் சென்று விட்டன. ஒரு நாள் கழிவறையில் அமர்ந்திருக்கும் போது, திடீரென யோசனை ஒன்று வருகிறது. "இது தான் மிக இழிவான பொருள், யாரும் இதைத் தொட விரும்புவதில்லை, பார்க்க விரும்புவதில்லை. இதைச் சாப்பிடுவது இருக்கட்டும், நுகரக் கூட விரும்புவதில்லை" என்று நினைத்து, தன் குருவிடம் அளிக்க, அதை எடுக்கப் போகிறான்.

அப்போது, "நில்! என்ன செய்கிறாய் என்னை?" என்று ஒரு குரல் கேட்கிறது. அவன், "உலகத்திலேயே மிக இழிவான பொருளைக் கொண்டு வருமாறு குரு சொன்னார். இது தான் இழிவானது என்று தெரிந்து கொள்ள மூன்று வருடங்கள் ஆகி விட்டது. ஆகவே, இப்போது நான் உன்னை எனது குருவிடம் குருதட்சிணையாக எடுத்துச் செல்லப் போகிறேன்" என்றான். அதற்கு அது, பார் நேற்று, நான் ஆப்பிளாக, உணவுப்பண்டமாக, அழகான பப்பாளியாக இருந்தேன். தென்ஆப்பிரிக்காவின் சிகப்பு வகை பப்பாளியல்ல. அதை விட அழகான பப்பாளியாக இருந்தேன். இவை எல்லாமாக நான் இருந்தேன், முட்டாளே, நீ என்னைத் தொட்டாய், நான் இவ்வாறு ஆகிவிட்டேன். இந்த உலகத்தில் இழிவான பொருள் எது என்று நீயே யோசித்துப்பார் என்று சொல்கிறது. அப்போது தான் அவனுக்கு உண்மையான ஞானம், விழிப்புணர்வு வருகிறது. அவன் தன் கைகளைக் கழுவிக் கொண்டு வெறுங்கையுடன் குருவிடம் செல்கிறான்.

குரு, "எங்கே என் குருதட்சணை? அது இல்லாமல் வந்திருக்கிறாயே?" என்று கேட்கிறார். அவன், "ஐயா, நானே உங்கள் குருதட்சணை" என்று சொல்லியபடி அவர் காலில் விழுகிறான். "நான்தான் உலகத்தில் உள்ளவற்றிலேயே மிகவும் இழிவானவன்" என்கிறான். குரு, "நல்லது, எழுந்திரு, நீ என் சீடனாகிறாய்" என்கிறார்.

[பூஜ்ய ஸ்ரீ பார்த்தசாரதி ராஜகோபாலாச்சாரி அவர்கள் எழுதிய "சிங்க நெஞ்சம்" என்ற புத்தகத்தில் இருந்து]

❖❖❖

# DISASTER MANAGEMENT AND NDRT*

- Dr. V. Venkatraman, Ph.D., Reader in History, Rajus' College, Rajapalayam and Member, National Disaster Response Team (IRCS, New Delhi).

India, a nation is familar for its Socio. Cultural bonds. Now the glory and cultural forwardness of this nation is getting such a setback due to somany natural and communal disasters. On 26th January 2001, the nation felt the outburst that happened in Gujarat. The National Crisis Management Committee got alarmed and put forth its agenda to mitigate the drastic situation that killed above 60,000 Indians in a day. The Indian Red Cross Society (IRCS), New Delhi rushed to the prone hit area and stayed over five months for the rescue and rehabilitation works in association with the International Committee of Red Cross Society (ICRC) and the Federation Red Cross, Switzarland, American Red Cross, British Red Cross, Swedish Red Cross, Spanish Red Cross and other International Voluntary Service Agencies.

The IRCS was instructed to form National Level Disaster Response Team (NDRT) by ICRC as the "Master Brain" to lessen severeness of the disaster. The IRCS, which realised the situation and founded the Disaster Management Centre (DMC) at IRCS Campus in 2002. The DMC has been given the priority to form a Team for the Disaster Management and Disaster Preparedness work. In December 2003, the DMC conducted a training workshop for thirty delegates from 20 Indian states. They fixed some criteria in selecting the delegates for the training. The DMC has declared the following states as the prime states to give priority. They are: Orissa, Gujarat, West Bengal, Tripura, Nagaland, Assam, Maharastra, Andhra Pradesh and Tamilnadu. They organised this national level training for about a week. The course was conducted in association with ICRC, Switzerland, Federation of Red Cross. The resource persons were invited from American, British, Swedish, Spanish and Yugoslavian and African National Societies of Red Cross. Twenty delegates were selected as the members of NDRT. The first ten members of Northern States are declared as "ALERT ONE" and the rest are "ALERT TWO" from Southern States. The first phase of formation of NDRT is over. The NDRT is nothing but a pool of experience of different sectors such as Medical, Voluntary Manager, Team Leader, Logistics Manager, Warehouse Officer, etc. They are expected to join the team immediately after a disaster. The Mobil Disaster unit is to be sent to the prone area as supporting sector to the Team efforts.

## DISASTER EFFECTS :

The disaster is categorised into two types. They are "Man Made" and "Natural Made". These "Hazards" are sudden or slow-onset events which disrupt the lives of people and communities. The hazard may be natural (drought, floods, earthquakes, landslides) or it may be based on man made factors (conflicts, environmental and technological degradation, political and economic deprivation etc). The disaster only occurs when it exceeds the adjustment capacity of the affected communities and individuals and their ability to cope with Crisis - Therefore, a disaster is fundamentally socio - economic phenomenon. It is an extreme state of every day life in which the continuity of community structures and processes temporarily fail. The disasters will usually have direct and indirect, as well as short - and long term impact on the people, systems and services. This distinction is particularly important for planning, relief and rehabilitation programmes.

## MAJOR DISASTERS IN INDIA :

The floods, high winds, earthquakes are the major disasters of Natural made type. In Indian scenario, major disasters occured upto 2001 are earthquakes (5 times); cyclones (4 times); floods (4 times) and landslides (2 times) Floods happen as a result of an increase in rainfall, the melting of snow or a lessening of rivers capacity to absorb or channelize water safely. Floods may be seasonal, due to the regular annual rise of river water or flash floods, caused by storms or sudden snow melts and it may also be caused by dam breaks.

The cyclone or high winds, threatens when a weather system of cyclical, high speed winds (100-300 kph), accompanied by heavy rain and sharp

* NDRT - NATIONAL DISASTER RESPONSE TEAM, IRCS, NEW DELHI.

differences of atmospheric pressure, forms over and area usually atleast 100 km in diameter, Humid air twists up from warm sea water into cooler air, moving the storm forward at 10-50 kph.

The Earthquakes occur where the seismic stresses buildup due to the movement of tectonic plates. Earthquakes are potentially very destructive events, yet long recorded experience and modern research shows that proper disaster preparedness measures can make a great difference in the level of damage, deaths and injuries.

**DISASTER MANAGEMENT : NEEDS ASSESSMENT**

In the first few hours and days of a disaster, decisive action is necessary. In reality, the available information is quickly gathered, some gusses based on past experience are made, an initial plan is put together and the relief operation starts. As the operation gets underway better information comes to hand, the action plan is revised and the operation adjusted to suit the emerging picture.

**HIERARCHY OF NEEDS :**

- The first is to provide basic life support needs; water and sanitation (WAT-SAN), food, medical assistance, shelter and fuel.
- The second is to protect disaster victims from physical viglence and aggression, particularly in disaster involving refugees and internally displaced persons.
- The third is to address the psychological and social stress caused by the disaster, providing the victims with psychological and social support.
- In earthquakes and highwind disasters, the survey is usually most effective when starting with an assessment by losses - personal losses, damage to infrastructure, loss of foodstacks etc.
- Rehabiliation needs may have to be surveyed so that disaster victims can be assisted to return to a normal and hopefully less vulnerable life. In situations where the return to normality is unlikely or only likely at some distant point in the future, the longer-term welfare needs of the disaster - affected population may have to be assessed.
- The capacity assessment must be carried out in paralled with the needs assessment.
- Whilst the most vulnerable are always the target of any National Society of Federation - assisted relief programme, it is not until one has a good picture of the needs and capacities in a disaster situation that a true assessment can be made of who is most vulnerable.
- A thorough and well-conducted survey leading to a clearly prepared and realistic plan of action provides the best basis for an effective operation.
- In any relief operation, there will be many different agencies involved - International NGO, Local Organisations, United Nations and Government Organisations. The initial assessment and plans for an operation need to be clear about what coordinating mechanisms are being put in place and what role the National Society and the Federation will have in these mechanisms.
- Co-ordination is even more important, as the provision of all basic services (Water-Food-Medical and Shelter) depends on the supply lines. The NS and FRC should always ensure that supply lines are safe and secure.
- It is a fact that today the vital role of the international media cannot be ignored. Assessment teams should be ready to talk to and assist the media, after due consulation with the Head of Delegation and the National Society.

The IRCS and Federation Network are capable of doing all relief and rescue operations. The NDRT which is the disaster brain of IRCS visits the prone area. It analyse and assess the disaster situation with the help of the Moble Disaster Unit (MDU). The main objective of NDRT is to get all types of assessments on the situation and it should be forwarded to the Disaster Management Centre (DMC) of IRCS. The next phase of relief works are to be invited by sending appeals to the other National Societies, Federation and the ICRC. Successful and active co-ordination can result only when there is mutual trust, confidence and understanding among the service sectors in the disaster hit prone zone. The NDRT is the co-ordinating agency of the Disaster Preparedness and Disaster Management.

❖❖❖

# சுற்றுப்புறத் தூய்மைப் பணியில் இளைஞரின் பங்கு

– முனைவர். க. அழகர், தமிழ் விரிவுரையாளர்.

**முன்னுரை :**

இளைஞர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு ஆவார்கள். எனவே, இளைஞர்கள் தங்கள் பொறுப்பை உணர்தல் வேண்டும். இளைஞர்கள் நல்லவர்களாக இருப்பதுடன் வல்லவர்களாகவும் செயல்பட வேண்டும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையை மனத்தில் பதித்து இளைஞர்கள் சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும். நாம் வாழும் வீடு, வீதி, ஊர், பள்ளி, கல்லூரி, அலுவலகம், கோயில், திரையரங்கு, பேருந்து நிலையம், பூங்கா, மருத்துவமனை போன்றவை எல்லாம் சுற்றுப் புறங்களாகும். இவை அனைத்தையும் தூய்மையாக வைத்திருப்பதே சுற்றுப்புறத் தூய்மையாகும். வீடாக இருந்தாலும் சரி, வீதியாக இருந்தாலும் சரி அங்கு சுற்றுப்புறத் தூய்மை மிக அவசியம். சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால் தான் சுகாதாரம் நன்றாக அமையும். நம் முன்னோர்களும் "சுத்தம் சுகம் தரும்", "கூழானாலும் குளித்துக் குடி", "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்றனர். உடல் தூய்மையும் உள்ளத் தூய்மையும் தனி மனித வாழ்க்கைக்கு நன்மை பயக்கும். இதையே வள்ளுவர்,

> "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
> வாய்மையால் காணப்படும்"

என்றார். ஆனால் சுற்றுப்புறத் தூய்மையோ சமுதாயம் முழுமைக்கும் நன்மை பயக்கும். எனவே உடல், உணவு, உடை, வீடு, சுற்றுப்புறம் ஆகியவற்றையும், மனத்தையும், தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். தூய்மைப் பணியில் மாணவர்கள் எவ்வாறு ஈடுபட வேண்டும் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**தன்னைத் தூய்மையாகப் பேணல் :**

தூய்மைப் பணியில் ஈடுபடும் இளைஞர்கள் முதற்கண் தங்களைத் தூய்மையாக வைத்துக் கொண்டு, பிறருக்கு வழிகாட்ட வேண்டும். காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்தல், பல் துலக்குதல், நீராடல், தூய ஆடையை உடுத்திக் கொள்ளல், தூய உணவை உட்கொள்ளல் ஆகிய பழக்கங்களைத் தவறாமல் மேற்கொண்டு ஒழுக வேண்டும். நன்றாகவே தலையில் எண்ணெய் தேய்த்து வாரிக் கொள்வதும், காலில் செருப்பணிந்து செல்வதும் தூய்மைப் பழக்கமாகும். நகங்களை நீளமாக வளர்ப்பதோ, பல்லால் கடிப்பதோ கூடாது. கண்ட கண்ட இடங்களில் காறி உமிழாமலும், சிறுநீரைக் கழிக்காமலும் இருப்பது நல்லது. கண்ட இடங்களில் காகிதங்களைக் கிழித்துப் போடாமல், அவற்றுக்குரிய குப்பைத் தொட்டியில் போடவும். தாம் கல்வி பயிலும் வகுப்பறையைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும். வகுப்பறையில் தாம் அமரும் இருக்கையில் மையைத் தெளிப்பதோ, கிறுக்கவோ கூடாது.

**சுற்றுப்புறத் தூய்மைப் பணியில் இளைஞர் :**

தூய்மைக் கேட்டால் வரும் நோய்களை உணராத மக்கள் கண்ட இடங்களில் குப்பைகளைக் கொட்டுகின்றனர். பேருந்து நிலையங்களிலும், பொது இடங்களிலும் வெற்றிலை போட்டுத் துப்புகின்றனர். கழிவுநீர்க் கால்வாய் நீரைத் தெருவில் ஓட விடுகின்றனர். நீர்நிலைகளில் ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டி அசுத்தப் படுத்துகின்றனர். அழுக்குத் துணிகளைத் துவைக்கின்றனர். அழுகல் பொருட்களை வீதியில் எறிகிறார்கள். வீட்டின் பக்கத்தில் கழிவு நீரைத் தங்க விடுகிறார்கள். கழிவுப் பொருட்கள் கலப்பதால் நீர் நிலைகள் மாசுபடுகின்றன. இத்தகைய செயல்களால் நேரும் தொற்று நோய்களைப் பற்றி மக்கள் அறிய மாட்டார்கள். எனவே, இளைஞர்கள் மக்களுக்கு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்த வேண்டும். ஈ மொய்த்த பண்டங்கள் விற்கப் படுவதையும் அவற்றை வாங்கி உண்பதையும் தடுத்திட வேண்டும். கல்வி பயிலும் இடங்கள், வழிபடும் கோயில், மருத்துவமனை போன்ற இடங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள மக்களுக்கு இளைஞர்கள் விழிப்புணர்ச்சி ஊட்ட வேண்டும். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாமையால் மக்கள் நோய்வாய்ப் படுகின்றனர். தொழிற்சாலைகள் வெளியிடும் நச்சுப்புகை மற்றும் வெளியிடும் கழிவுப் பொருட்கள் காற்றிலும் ஆறுகளிலும் கலக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**முடிவுரை :**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" – செல்வத்தை விட உடல் நலமே மிகவும் மதிப்பு வாய்ந்தது. செல்வத்தைத் தொலைத்து விட்டாலும் மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் உடல் ஆரோக்கியத்தைத் தொலைத்து விட்டால் மீண்டும் பெறுவது மிகக்கடினம். உடல் ஆரோக்கியம் கெடாமல் இருக்க நாம் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். மக்களின் நல்வாழ்வுக்குத் தூய்மையான காற்றும்,

சுத்தமான தண்ணீரும் மிக அவசியம். ஒவ்வொருவரும் அவரவர் வீட்டைச் சுத்தமாக வைத்திருந்தாலே போதும் இந்த உலகமே சுத்தமாகி விடும்.

*"If every one keeps his house clean, It will leed to a cleaner world"*

"பிள்ளையைப் பெறுவது தாயின் கடமை, அவர்களை அறிவாளியாக்குவது தந்தையின் கடமை, இந்த நாட்டையும், வீட்டையும் பேணிக்காப்பது இளைஞர்களின் கடமையாகும்.

❖❖❖

## JOKES

- X. Antony Viyagappan, I B.A.,

Father (to his son) : You should be Ashamed. Because when Nehru was of your age, he was the monitor of his class.

Son : Oh..! Dad..! You should be Ashamed. Because when he was of your age, he was the Prime Minister of India.

❖❖❖

## இன்றைய இளைஞர்கள்

- N. Ramesh, Lecturer, Dept. of Textiles.

☆ காதலுக்காக –
கனவு ஜன்னல்களைத்
திறந்து வைத்து ...
முன்னேற்றக் கதவுகளை
மூடி வைப்பார்கள் !

☆ விழிகளை மூடிக்கொண்டு
விடியலைத் தேடும்
கதிரவன்கள் !

❖❖❖

## நட்சத்திரங்கள்

- N. Ramesh, Lecturer, Dept. of Textiles.

☆ நிலாப்பெண்
இட்டுச் சென்ற ...
கோலப்புள்ளிகள்..!

☆ வானவயலில்
வித்திய முளைக்காத
வெள்ளி விதைகள்..!

❖❖❖

## எனக்குள் விடியல்

- S. இராமகிருஷ்ணன், I B.Sc., (Physics)

☆ மூழ்கித் திளைத்தே
போனேன்
சிசுக் கொலையில் ...
ஓர் இரவு ஒப்பாரியுடன்
ஈமச்சடங்குகளை
முடித்துக் கொண்டு வந்தேன்
இறந்து போன
எனது அறியாமைக்கும்...

❖❖❖

## தேசியக்கொடி

- மு.ரா. ராஜேஸ் கண்ணன், I B.Sc., (Physics)

☆ சிவந்த கீழ் வானம்
வெள்ளை நீரோடை
பச்சைப் புல் வெளி
ஆம்..!
இயற்கையிலும்
ஒரு தேசியக்கொடி..!

❖❖❖

## யுகம்

- மா. அய்யர், III B.Sc., (Maths)

☆ அரசனின் படைபலத்திற்கு
திறக்காத கதவுகள்...
அப்பரின் பாடலுக்குத் திறந்தது...
ஆன்மீக யுகம்..!

☆ பகத்சிங்கின் குண்டுக்கும்,
சுபாஷின் துப்பாக்கிக்கும்
திறக்காத சுதந்திரக் கதவுகள்...
அண்ணலின் அகிம்சைக்குத் திறந்தது...
அன்பின் யுகம்..!

❖❖❖

## நாளைய நாயகனே !

- ஜோ. அமுதன் டானியல், III B.Sc., (Comp.Science)

☆ எரிபொருள் நிரப்பிய
ஏவுகணை நீ...
விண்ணைப் பிளந்து
விடிவெள்ளிகளை ஆய்வு செய்..!

❖❖❖

# ஹைக்கூ... கவிதைகள்

- ஜோ. அமுதன் டானியல், III B.Sc., (Comp.Science)

- கூலியே கிடையாதா...?
  பனி மூட்டை சுமக்கும்
  புற்கள்..!
- முத்து முத்தாய்
  பூக்களில் தேன்...
  வேர்களின் வியர்வை...!

❖❖❖

# முரண்பாடு

- R. சங்கர், II B.A., (History)

- கோவில் வாசலில்
  எச்சமிட்டது காகம்...
  விரட்டினான்...!
  கண்ட இடங்களில்
  எச்சில் துப்பும்
  மனிதன்...!

❖❖❖

# பெண்ணே...

